அ.சா.1 சிராச்முக்தார் மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ( 2, 3,4, 6 எதிரிகள் ஆஜர். 5 வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார்.)

ஒரு நபரின் உடல் கிடப்பதாக கிராமத்தில் உள்ள ஒரு நபர் சொல்லி அந்த இடத்திற்கு போனேன். சொன்ன நபரின் பெயர் தெரியாது. நான் கொடுத்த புகாரில் தகவல் கிடைத்து அந்த இடத்திற்கு சென்றதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். காலை 08.30 மணிக்கு எனக்கு தகவல் சொன்னார். சம்பவ இடத்தில் இருந்து எனது அலுவலகம் 1 கிமீ தூரம் உள்ளது. தகவல் கிடைக்கும் போது நானும், தலையாரியும் அலுவலகத்தில் இருந்தோம். தகவல் கிடைத்த விபரத்தை எனது டைரியில் எழுதிவிட்டு சென்றேன் என்றால் சரியல்ல. வருவாய் ஆய்வாளருக்கு தகவல் சொன்னேன். தொலைபேசி மூலமாக தகவல் சொன்னேன். வருவாய் ஆய்வாளர் பெயர் முருகன். அவ்வாறு தகவல் சொன்னதாக புகாரில் சொல்லவில்லை. அந்த விபரத்தை புகாரில் சொல்லாததற்கு குறிப்பிட்ட காரணம் இல்லை. நானும், தலையாரியும் தனி, தனியாக இரண்டு சக்கர வாகனத்தில் சென்றோம். உடல் கிடந்த இடத்திற்கு சுமார் 08.45 மணிக்கு சென்றுவிட்டோம். நாங்கள் சென்ற பாதையில் கண்மாயில் தண்ணீர் இல்லை. ஓரமாக தண்ணீர் இருந்தது. அந்த கண்மாயிக்குள் பாதை இருந்ததாக வருவாய் ஆவணங்களில் இல்லை. கண்மாயிக்குள் இருந்த மின் கம்பம் சாய்ந்த நிலையில் இருந்தது. அதில் மின்விளக்கு இல்லை. அந்த ஊரில் இருந்து கண்மாயை நேரடியாக பார்க்க முடியாது என்றால் சரிதான். கண்மாயை சுற்றி மண்மேடு, கருவேலி மரங்களும் உள்ளது என்றால் சரிதான். நான் சென்ற போது உடல் கிடந்த இடத்தில் ஊர் மக்கள் இல்லை.

எனக்கு தகவல் சொன்ன நபரும் அங்கு இல்லை. உடல் கிடந்த இடம் காய்ந்த நிலையில் இருந்தது. அந்த இடத்தில் இரத்தமாக கிடந்தது. நான் அந்த உடலை திருப்பிப்போட்டு பார்க்கவில்லை. அந்த இடத்தில் சுமார் 10 நிமிடம் இருந்தேன். நான் உடலில் இருந்த ஆடைகளை பற்றியும், பொருட்களை பற்றியும் குறித்து கொள்ளவில்லை. நான் அங்கே இருக்கும் போது போலீசார் வந்து விட்டார்கள். முதலில் நரிக்குடி ஆய்வாளரும், 10 போலீசாரும் வந்தார்கள். நான் பஸ் ஸ்டாப்பிற்கு வந்துவிட்டேன். அதன் பின்பும் போலீசார் சுமார் 1.1/2 மணி நேரம் அங்கே இருந்தார்கள். அந்த 1.1/2 மணி நேரமும் நான் பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தேன். சுமார் 11.00 மணி வரை பஸ் ஸ்டாப்பில் இருந்தேன். போலீசார் அங்கு இருந்த போது பொது மக்கள் அங்கு செல்லவில்லை. அந்த 1.1/2 மணி நேரம் போலீசார் அங்கு என்ன செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதன் பின்பு அங்கே காவல்கண்காணிப்பாளர் வந்தார். என்னிடம் எதுவும் கேட்கவில்லை. யார், யாரிடம் விசாரித்தார்கள் என்றும் தெரியாது. காவல்கண்காணிப்பாளர் சுமார் 11.30 மணி வரை அங்கே இருந்தார். சுமார் 11.45 மணிக்கு அந்த இறந்த நபரின் உடலை ஆம்புலன்ஸ் மூலமாக கொண்டு சென்றார்கள். நான் அங்கிருந்த இருஞ்சிறையில் உள்ள எனது அலுவலகத்திற்கு சென்றேன். அலுவலகத்தை பூட்டிவிட்டு கட்டனூர் காவல்நிலையத்திற்கு சென்றேன். அங்கு நானும், தலையாரியும் கலந்து புகார் எழுதினேன். சுமார் 20 நிமிடம் எழுதினேன். கட்டனூர் உதவி ஆய்வாளரிடம் புகார் கொடுத்தேன். பொதுவாக அலுவலக முத்திரையை அலுவலகத்தை விட்டு வெளியே கொண்டு செல்லக் கூடாது என்றால் நான் பையில் வைத்திருந்தேன். VAO

Manual ல் அலுவலக முத்திரை வெளியே கொண்டு செல்லக் கூடாது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ஞாபகம் இல்லை. அந்த விபரம் எனக்கு தெரியும் என்றும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் அலுவலகத்தை விட்டு செல்லும் போது துணை வட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியருக்கு தகவல் சொன்னேன். அந்த விபரத்தை புகாரில் சொல்லவில்லை. புகாரில் குறிப்பிட்ட தேதியில் Over writing உள்ளது என்றால் சரிதான். 12.00 மணிக்கு நான் புகார் கொடுத்துவிட்டேன். அன்று நான் அலுவலகத்திற்கு சென்றுவிட்டேன். இரண்டு நாள் கழித்து எதிரிகளை பிடித்ததாக போலீசார் சொன்னார்கள். அதன் பின்பு இறந்த நபர் அந்த ஊர்க்காரர் தானா என்று அன்றும், இரண்டு நாள் கழித்தும் கேட்டார். அதன் பின்பு போலீசார் விசாரிக்கவில்லை. நான் சொல்லும் காலத்தில் மழை காரணமாக கண்மாயில் தண்ணீர் நிறைந்திருந்தது என்றும், அதை நான் மறைத்து தண்ணீர் இல்லை என்று பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் இறந்த நபரின் உடலை பார்க்க சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றும் காவல்நிலையத்தில் வைத்து புகார் எழுதிக்கொடுத்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. புகாரில் இறந்த நபர் எந்த நேரத்தில் இறந்திருப்பார் என்று சொன்னேனா என்று ஞாபகம் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ளது. இறந்த நேரத்தை மருத்துவர் தான் குறிப்பிட்டு சொல்ல முடியும். அந்த நேரத்தை நான் எவ்வாறு சொன்னேன் என்றால் முதல் நாளில் அந்த உடல் கிடந்ததாக தகவல் இல்லை. அதனால் அவ்வாறு சொன்னேன். முதல் நாள் 07.00 மணிக்கு நான் கண்மாய் சென்று பார்க்கவில்லை. போலீஸ் சொன்னதால் அந்த நேரத்திற்குள் நடந்திருக்கும் என்று எழுதினேன். நான் எழுத்து மூலமாக

எனது அலுவலகத்திற்கு ரிப்போர்ட் கொடுத்தேன். எழுத்து மூலமாக மேல் அதிகாரிக்கு ரிப்போர்ட் கொடுத்ததை போலீஸ் விசாரணையில் சொன்னேன். நான் இறந்த நபரை பற்றி பொது மக்கள் யாரையும் விசாரிக்கவில்லை. நான் புகாரில் இறந்த நபரை பற்றி அக்கம், பக்கத்திலும், பக்கத்து கிராமத்திலும் விசாரித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றும், போலீசார் சொல்ல, சொல்ல எழுதியதில் கையொப்பம் மட்டும் போட்டு அலுவலக முத்திரையை போட்டேன் என்றால் சரியல்ல. அந்த புகாரில் தலையாரியும் கையொப்பம் செய்தார்.

SC 28/2019 நாள் 22.11.2024

அ.சா.2 பெரியசாமி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ( 2, 3,4, 6 எதிரிகள் ஆஜர். 5 வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார்.)

அன்றைய தினம் முதல் தகவல் எனக்கு தான் வந்தது என்றால் சரியல்ல. என்னை காலை 07.00 மணிக்கு கிராம நிர்வாக அலுவலர் கூப்பிட்டார். அலுவலகத்திற்கு வரும் படி சொன்னார். எனது வீடு இருஞ்சிறையில் இருந்து 9 கிமீ தொலைவில் நாலூரில் உள்ளது. அங்கு இருந்து நான் 08.30 மணிக்கு அலுவலகத்திற்கு வந்தேன். அப்போது கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தை பூட்டிவிட்டு வெளியே இருந்தார் என்றால் சரிதான். என்னிடம் ரோந்து சென்று வரலாம் என்று சொன்னார். அவருடைய இரண்டு சக்கர வாகனத்தில் நானும் சென்றேன். கண்மாய்க்கு போகலாம் என்று சொன்னார். நாங்கள் கண்மாய்க்குள் இறங்கிய போது உள்ளே பிரேதம் கிடப்பதாக கிராம நிர்வாக அலுவலர் சொன்னார். பிரேதத்தை தவிர கண்மாய்க்குள் வேறு யாரும் இல்லை. அங்கே சுமார் 20 நிமிடம் இருந்தோம். பக்கத்தில் மின் கம்பம் சிறிது சாய்வாக இருந்தது. அதில் மின் விளக்கு இல்லை. அங்கே கிராம நிர்வாக அலுவலர் எதுவும் குறித்துக்கொண்டாரா என்று நான் கவனிக்கவில்லை. அங்கிருந்து வெளியே வந்து மேல் அதிகாரிகளுக்கு தகவல் சொன்னோம். அங்கிருந்து நேராக அலுவலகம் சென்றுவிட்டோம். உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தோம். அவர்கள் வருவாய் ஆய்வாளர் மற்றும் தாசில்தார். அதன் பின்னர் 12.00 மணிக்கு காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். அதற்கு முன்னால் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார். புகார் கொடுக்க நானும், கிராம நிர்வாக அலுவலர் வாகனத்தில் சென்றேன். காவல்நிலையத்தில் வைத்து புகார் எழுதினோம்.

காவல்நிலையத்தில் வைத்து புகாரை கிராம நிர்வாக அலுவலர் எழுதினார். அவரது கைப்பை வாகனத்தில் இருந்தது. அலுவலத்தில் இருந்து எடுத்துச் செல்லவில்லை. புகார் VAO முத்திரை வைத்து கொடுத்தார். காவல்நிலையத்தில் இரண்டு போலீசாரும், உதவி ஆய்வாளரும் இருந்தார்கள். பிரேதம் கிடந்த இடத்தில் நாங்கள் புகார் கொடுத்த பின்பு துணை கண்காணிப்பாளரும், மாவட்ட கண்காணிப்பாளரும் வந்தார்கள். நாங்கள் புகார் கொடுக்கும் முன்பே போலீசார் அந்த இடத்திற்கு வந்தார். என்னிடம் போலிசார் விசாரிக்கவில்லை. அன்று மாலை 06.00 மணிக்கு காவல்நிலையத்தில் வைத்து VAO வாக்குமூலம் கொடுத்தார். என்னை விசாரிக்கவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக சிறுவர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தேன். அந்த சாட்சியத்தில் எனக்கு தகவல் வந்ததாகவும், அதன் பின்பு கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் கொடுத்ததாகவும் சொன்னேன் என்றால் சரியல்ல. VAO மதுரையில் இருந்து வந்தார் என்றால் மதுரையில் வீடு உள்ளது ஆனால் இருஞ்சிறையில் தங்கியுள்ளார். நான் VAO வை போன் பண்ணி அழைத்தேன் என்றும், அவர் மதுரையில் இருந்து வர லேட் ஆனது என்றும் சிறுவர் நீதிமன்றத்தில் சொல்லவில்லை. நான் சொல்வது போல் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதால் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல.

SC 28/2019 நாள் 22.11.2024

அ.சா.3 தென்னரசு மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ( 2, 3,4, 6 எதிரிகள் ஆஜர். 5 வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார்.)

கட்டனூர் செல்வதற்கு இருஞ்சிறை வழியாகவும் செல்லலாம் . அத்திகுளம் வழியாகவும் செல்லலாம். இருஞ்சிறை வழியாக செல்வது தான் பக்கம். நான் செல்லும் போது அ.சா.1. அ.சா.2 தவிர பொது மக்கள் இருந்தார்கள். காவல்துறையில் இருந்து நரிக்குடி ஆய்வாளர், உதவி ஆய்வாளர், தலைமை காவலர் ஆகியோர் உட்பட சுமார் 7 போலீசார் இருந்தார்கள். நான் அங்கே 12.30 மணி வரை இருந்தேன். அ.சா.1, 2 ம் அங்கே இருந்தார்கள். நான் போலீசாருடன் பேசிக்கொண்டிருந்தேன். நான் இருக்கும் போது 12.00 மணிக்கு நரிக்குடி ஆய்வாளர் பார்வை மகஜர் தயார் செய்தார். அப்போது என்னை தவிர பொது மக்களும் இருந்தார்கள். இதற்கு முன்னால் நான் சிறுவர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தேன். அங்கே சாட்சி சொல்லும் போது கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தெரியாது என்று சொன்னேன் என்றால் சரியல்ல. தற்போது போலீசார் சொல்லிக்கொடுத்து தான் மாற்றிச் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அந்த இடத்திற்கு செல்லவில்லை என்றும், ஆய்வாளர் என் முன்னிலையில் பார்வை மகஜர் தயார் செய்யப்படவில்லை என்றும், எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும் , நான் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல.

SC 28/2019 நாள் 22.11.2024

அ.சா.4 முருகேசன் மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ( 2, 3,4, 6 எதிரிகள் ஆஜர். 5 வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார்.)

தலையாரி என்னிடம் தகவல் சொல்லி நான் சென்ற போது நேரம் காலை 08.45 மணி இருக்கும். நான் சென்ற போது போலீசார் மற்றும் பொது மக்கள் இருந்தார்கள் யார், யார் என்று தெரியாது. நான் வெளியே வந்தவுடன் போலீசார் என்னை விசாரித்தார். அதன் பின்பு நீதிமன்றத்தில் தான் சாட்சியம் அளித்தேன். தலையாரி வேண்டியவர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SC 28/2019 நாள் 22.11.2024

அ.சா.6 நாகராஜன் மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ( 2, 3,4, 6 எதிரிகள் ஆஜர். 5 வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார்.)

அறை எடுத்தவர்களின் பெயர்கள் அறை எடுத்த போது குணா என்பவர் சொல்லித் தெரியும். போலீசார் விசாரித்த போது குணா என்பவர் சொல்லித்தான் பெயர் தெரியும் என்று நான் சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் விசாரணை வாக்குமூலத்தில் அவ்வாறு இல்லை என்றால் சரிதான். எங்கள் விடுதியில் உள்ள பதிவேட்டில் குணா பெயர் மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான். மறுநாள் அந்த நபர்கள் அறையை காலி செய்து சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். என்னிடம் திருமணத்திற்காக என்று சொல்லி ரூம் போட்டார்கள் என்றால் சரிதான். மறுநாள் ரூம் பாய் என்னிடம் சொன்னதாக போலீசார் சொல்லிக்கொடுத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னை உதவி ஆய்வாளர் விசாரித்தார். எனக்கு உதவி ஆய்வாளர் மற்றும் ஆய்வாளர் பார்த்தால் வித்தியாசம் தெரியாது. என்னிடம் உதவி ஆய்வாளர் என்று சொன்னார். ரூம் போட்டதை தவிர மற்ற விபரங்கள் போலீசார் சொல்லிக்கொடுத்துச் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

SC 28/2019 நாள் 22.11.2024

அ.சா.8 கண்ணன் மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ( 2, 3,4, 6 எதிரிகள் ஆஜர். 5 வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார்.)

எனது கடை ஆறுமுச்சந்தியில் அதிகமாக போக்குவரத்து உள்ள இடத்தில் உள்ளது என்றால் சரிதான். எனது கடைக்கு எதிரில் ஒயின்ஸ் ஷாப் உள்ளது என்றால் சரிதான். அங்கு எப்போதும் சின்ன, சின்ன தகராறுகள் நடந்து கொண்டு இருக்கும் என்றால் சரிதான். அன்றைய தினம் யார், யார் சண்டை போட்டார்கள் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரியல்ல. கார்த்திக் என்பவரை அடித்தவரின் பெயர் தற்போது ஞாபகம் இல்லை. வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் தெரியாது. மறுநாள் போலீசார் விசாரித்தார். கொலை நடந்த இடத்தில் உள்ள போலீசார் விசாரித்தார். நான் சொன்னது போல் கார்த்திக்கை யாரும் அடிக்கவில்லை என்றும், நான் டீ கடை நடத்துவதால் போலீசார் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SC 28/2019 நாள் 22.11.2024

அ.சா.10 குணசேகரன் மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ( 2, 3,4, 6 எதிரிகள் ஆஜர். 5 வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார்.)

நான் முதல் விசாரணையில் சொன்னதை தவிர வேறு எதுவும் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.